## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகம் 2010

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2011 மார்ச் 01 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கீட்டுக் குறைபாடுகளை உள்ளடக்கிய கணக்காய்வு ஐய வினா ஒன்று 2011 ஏப்ரல் 19 ஆந் திகதி பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2011 மே 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### 1.2.3 இனங்காணப்படாத மீதி

2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தொடர்ச்சியாகக் காணப்பட்டுவரும் 3 முற்பணக் கணக்குகளின் ரூபா 200,166 தொகையான மீதியினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 அறவிடப்படாது காணப்படும் மீதி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்குகளின் ரூபா 257,853 கூட்டுமொத்தமான மீதி 02 ஆண்டுகளிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடாது காணப்பட்டன.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2004 யூலை 29 ஆந் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க சுற்றுநிருபம் | நிறுவனத்தினால் அதனது நிதிகளை முதலீடு செய்யும் போது பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் முதலீடு செய்த ரூபா 6,000,000 தொகையும் 2010 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்த ரூபா 9,200,000 தொகையான நிலையான வைப்புக்களும் தொடர்பாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2010 கல்வி ஆண்டில் தொழில்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறியின் விண்ணப்பக் கட்டணமாக ஒரு விண்ணப்பதாரியிடமிருந்து ரூபா 500 படி 826 விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூபா 413,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அப்பணத்திலிருந்து 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பரீட்சை மேற்பார்வை, விடைத்தாள் திருத்துதல், விடுமுறைதின படிகள், மேலதிக நேர வேலை ஆகிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதேபோல் அக் கற்கைநெறி வருமானத்திலிருந்து ரூபா 167,800 தொகை மாணவர் நலன்புரிக்கான செயற்திட்டத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. தொழிற் கல்வி கற்கை நெறிக்கான அந்த உத்தியோகத்தர்களின் தேவைப்பாட்டினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளானது மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்கத்தின் மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 18,098,126 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான இதனோடொத்த பற்றாக்குறை ரூபா 12,297,565 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,800,561 ஆல் அதிகரித்திருந்தது. மீண்டுவரும் செலவுக்கான ரூபா 19,000,000 தொகையான அரசாங்கத்தின் மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 901,874 மிகையாக மாறியிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு மீண்டுவரும் செலவுக்கான ரூபா 16,806,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,508,435 தொகையான மிகையாக மாறியிருந்தது.

முன்னைய ஆண்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 3,606,561 தொகையான மிகையில் குறைவுக்கு ரூபா 4,482,625 தொகையான வருமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூபா 8,089,186 தொகையான செலவு அதிகரிப்பு விசேடமாக தாக்கமளித்திருந்தது.

**2.1.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்**

---

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தினை அடிப்படையாகக் கொண்டு இரண்டாவது மற்றும் மூன்றாவது மொழித் தேர்ச்சிக்காக சம்பளமும் படிகளுமாக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 78,450 செலுத்தப்பட்டிருந்தது. இந்த படிகள் கொடுப்பனவு அரசாங்கத்தின் சட்ட விதிகளுக்கு முரணானது என பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்தியிருந்த போதிலும் அக்கொடுப்பனவு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

**2.2 செயற்பாட்டு மீளாய்வு**

---

**2.2.1 செயலாற்றல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவருகின்ற பட்டப்படிப்பு கற்கைநெறியாகிய தொழிற்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறிக்காக 2010 ஆம் ஆண்டில் பதிவுசெய்து கொண்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கை 126 ஆக இருந்ததுடன் அது கடந்த ஆண்டினை விட 44 மாணவர்கள் குறைவாகும்.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது பணம் அறவிடும் 18 கற்கை நெறிகள் நடாத்தப்பட்டதுடன் அதற்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 9319 ஆகும். பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களின் எண்ணிக்கை 576 ஆக இருந்ததுடன் அது மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் 6% ஆக இருந்தது. சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 576 ஆக இருந்ததுடன் அது பரீட்சைக்குத் தோற்றிய

மாணவர்களின் எண்ணிக்கையில் 6.6% ஆக இருந்தது. 06 பரீட்சைகள் நடாத்தப்பட்டு 04 இலிருந்து 10 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பணம் அறவிடும் கற்கை நெறிகளின் கட்டணமாக ரூபா 54,497,829 தொகை 2010 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்ததுடன் அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14% அதிகரிப்பாகும்.

(ஈ) தொழிற்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறிக்காக 2010 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1107.5 ஆக இருந்ததுடன் அது செமஸ்டர் முறைமையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டினை விட விரிவுரை மணித்தியாலங்கள் 417.5 அதிகரித்துள்ளது. அவ்வாறே 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட உள்ளபடியான மொத்த மணித்தியாலங்களின் எண்ணிக்கையும் 1107.5 மணித்தியாலங்களாக இருந்ததுடன் அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 658.5 மணித்தியாலங்கள் அதிகமாகும். நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் 423 மணித்தியாலங்கள் நிறுவகத்தின் ஐந்து உள்ளக விரிவுரையாளர்களினாலும் 724.5 மணித்தியாலங்கள் 24 பகுதிநேர விரிவுரையாளர்களினாலும் நடாத்தப்பட்டன. இதற்கிணங்க கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்ளக விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 254 ஆல் அதிகரித்தும் பகுதிநேர விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 444.5 ஆல் அதிகமாகவும் காணப்பட்டது. மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையில் உள்ளக விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 37% ஆக இருந்தது.

**2.2.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2007 செப்தெம்பர் மற்றும் 2008 பெப்ரவரி மாதங்களின் போது ரூபா 330,155 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட விரல் அடையாளங்களைப் பதிவுசெய்யும் மூன்று இயந்திரங்கள் திருத்தம் செய்ய முடியாது நிலையில் காணப்பட்டமையினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5 ஆம் அத்தியாயம் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் வருடாந்தப் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து கூட்டிணைந்த திட்டமோ அல்லது அவ்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிறுவனத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களும் இலக்குகளும் என்ன என்பதனையும் அதன் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தினையும் பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

**2.2.4 பாதீடு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் மேற்கூறிய திட்டங்களின்றி பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பரீட்சை நடவடிக்கை

(ஆ) நிலையான சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டுவருதல்.